2022 ஏப்ரல் 28] [*முனைவர் பழனிவேல் தியாக ராஜன்*]

திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் தெளிவாகக் கூற வந்தார். மத்திய அரசு, 5 ரூபாய் பெட்ரோலிலும், 10 ரூபாய் டீசலிலும் குறைத்தது என்று சொன்னார். Of course *இந்த* pump*–ல் இருக்கிற விலையினுடைய அடிப்படை பங்கு, கச்சா எண்ணெய்யின் விலை. அதனால், இங்கே தெளிவான விவரத்தை நான் பகிர்ந்துகொள்ள வேண்டும். 2011–லிருந்து 2013–க்குள் கச்சா எண்ணெய்யின் விலை, 110–லிருந்து 120, 130* dollar *ஆக அதிகரித்ததால், இங்கே* excise*–ஐக் குறைத்துவிட்டு, அதாவது ஒன்றிய அரசாங்கம் கச்சா எண்ணெய் விலை அதிகரிக்கும்போது* excise*–ஐ 14.40 ரூபாயிலிருந்து வெறும் 9.40 ரூபாயாக, 5 ரூபாய்* excise*–ஐக் குறைத்துவிட்டு, அதற்குப் பதில் வருமானமாக அந்த* bond*–ஐ அளித்தார்கள். அவர்கள் அதை வேறு எந்தக் காரணத்திற்கும் அளிக்கவில்லை. வரியைக் குறைத்துவிட்டு,* bond*–ஐ அளித்து அவர்கள் செய்தது என்னைப் பொறுத்தவரைக்கும் சிறப்பான நிதி மேலாண்மையாகும். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், தயவுசெய்து அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *என்னைப் பொறுத்தவரைக்கும், அது சிறப்பான நிதி மேலாண்மை, மனிதநேயத்துடன் செய்யப்பட்ட செயல். அதற்காகத்தான் வெறும் 1,30,000 கோடி ரூபாய். இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை அவர்கள் சொல்வதுபோல் அதற்குமேல் சுமார் 26.000 கோடி ரூபாய்க்கும்மேல் வந்திருக்கிறது அதே வரியில். அப்போது கட்டாமல் வைத்திருந்தால், ஏன் கட்டாமல் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்க வேண்டும்.*

3. கவன ஈர்ப்பு

அரியலூர் மாவட்டம், சிமெண்ட் தொழிற்சாலைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையில் ஏற்படும் பாதிப்புகள். . .

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுக்கிடையே நடைபெற்ற விவாதம் குறித்த கடந்தகால சட்டமன்றப் பதிவுகள் நீக்குதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 2 வரி பேசினால், ½ மணி நேரம் அதற்கு பதில் சொல்கின்றார்கள். சொல்ல வேண்டியதுதான் அவர்களின் கடமை. நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம். மீண்டும் எங்களுக்கு அந்த வாய்ப்பு கொடுக்க வேண்டும் இல்லையா! ஒரு பக்கம் மட்டும் பதிவாகிறது. மற்றொரு பக்கம் பதிவாகவில்லை. பத்திரிகையிலும் செய்தி வேறுமாதிரி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலையில் நீங்கள் சொன்னது அவ்வளவும் இருக்கின்றது. நானே படித்தேன்.

பிற்பகல் 12–15

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், மரியாதைக்குரிய முனைவர் பொன்முடி அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைத் தெரிவித்தார்கள். ஏதோ, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, அவர்கள் சந்தோஷப்படுகின்ற விதமாகப் பேசினால் பதவி கிடைக்கும் என்று சொன்னார்கள். இங்கே இருந்தவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். அதை எந்த அடிப்படையில் அவர்கள் கொடுத்தார்கள்? எல்லா கட்சிகளிலிருந்தும், இன்னும் ஏன், பல கட்சிகளிலிருந்து பல கட்சிகளுக்குப் போனவர்களுக்கெல்லாம் உயர் பதவி கிடைத்திருக்கிறது. இவையெல்லாம் அரசியல் சூழ்நிலைக்கேற்றவாறு நடக்கின்ற சம்பவங்கள். (மேசையைத்

2022 ஏப்ரல் 28] [*திரு. மு.க. ஸ்டாலின்*]

குறிப்பில் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது உங்களுடைய பெருந்தன்மையைக் குறிக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் அந்த வார்த்தைகளை மாற்றுவதற்கு, நீங்கள் உங்களுடைய கருத்தாக, எனக்கு ஆலோசனையாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதை ஏற்று, அவ்வாறே மாற்றப்படும் அல்லது நீக்கப்படும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.*

3. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

அரியலூர் மாவட்டம், சிமெண்ட் தொழிற்சாலைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் விபத்து—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் விபத்துகள் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

அரியலூர் மாவட்டத்தில் இயங்கும் அனைத்து தனியார் மற்றும் அரசு சிமெண்ட் தொழிற்சாலைகளில், மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவீடுகளுக்குக் குறைவாக மாசு வெளியேறும்வண்ணம் நவீன மாசுக் கட்டுப்பாட்டுக் கருவிகள்

பொருத்தப்பட்டுள்ளன. எனவே, பொது மக்களுக்கு சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாதவாறு, உரிய முன்னேற்பாடுகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், சிமெண்ட் ஆலைகளுக்குத் தேவையான சுண்ணாம்புக் கற்களை சுரங்கப் பகுதியிலிருந்து ஏற்றிவரும் கனரக வாகனங்கள், மாவட்ட நிர்வாக உத்தரவின்படி, நகர்ப்புற சாலைகள் மற்றும் ஊரகச் சாலைகளில் காலை 7–30 மணி முதல் 10–30 மணி வரையிலும், மாலை 3–30 மணி முதல் 5–30 மணி வரையிலும் இயக்கப்படுவதில்லை. மேலும், தனியார் சிமெண்ட் ஆலைகளுக்கு சுண்ணாம்புக் கற்களை ஏற்றிவரும் கனரக வாகனங்களை தனிச் சாலையில் இயக்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், சுண்ணாம்புக் கல் ஏற்றிவரும் கனரக வாகனங்களில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட்டுள்ளது. வாகனத்திற்கு நிர்ணயித்த எடைக்கு உட்பட்டு சுண்ணாம்புக் கல் மற்றும் சிமெண்ட் ஏற்றி வருவதற்கும் மற்றும் லாரிகளில் தார்பாய் கட்டி, மாசு ஏற்படாதவாறு கனரக வாகனங்கள் இயக்கப்படுவதையும் அனைத்து சிமெண்ட் தொழிற்சாலைகளின்மூலம் உறுதி செய்யப்படுகிறது. இதன்மூலம் விபத்துகள் பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில் ராம்கோ சிமெண்ட்ஸ், இந்தியா சிமெண்ட்ஸ், டால்மியா சிமெண்ட்ஸ், செட்டிநாடு சிமெண்ட்ஸ், அல்ட்ராடெக், தமிழ்நாடு அரசு சிமெண்ட்ஸ் உட்பட 8 சிமெண்ட் நிறுவனங்கள் இருக்கின்றன. மேலும், அங்கே நிறைய கனிமச் சுரங்கங்கள் இருக்கின்றன. வெள்ளை சுண்ணாம்புக் கல் சுரங்கங்கள் இருக்கின்றன. 200–க்கும் மேற்பட்ட அந்தத் திறந்தவெளி சுண்ணாம்புக் கல் சுரங்கங்களிலிருந்து சுண்ணாம்புக்கல் லாரிகளில் ஏற்றப்பட்டு தொழிற்சாலைகளுக்குச் செல்கின்றபோது அடிக்கடி மிகப் பெரிய அளவில் விபத்துகள் ஏற்பட்டு, ஓராண்டில் குறைந்தது 20–க்கும் மேற்பட்டவர்கள் தொடர்ச்சியாக இறக்க நேரிடுகிறது. மேலும், நிலம் கொடுத்தவர்களுக்கு உரிய இழப்பீடு தரப்படவில்லை. வேலைவாய்ப்பும் வழங்கப்படவில்லை.

2022 ஏப்ரல் 28] [திரு. தி. வேல்முருகன்]

பெரும்பாலும் விவசாய நிலங்கள் ரூ.1 இலட்சம், ரூ.2 இலட்சம் அளவிற்குத்தான் விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது. சுரங்கத்தைச் சுற்றி 33 சதவிகிதம் பசுமைக் காடுகள் வளர்க்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், அப்படி எதையும் அவர்கள் வளர்க்கவில்லை. சுரங்கச் செயல்பாடுகளால் மக்கள் சிறுநீரக பாதிப்பு, நுரையீரல் தொற்று, சுவாசப் பிரச்சினைகள், கண் பார்வைப் பிரச்சினை, கர்ப்பிணிப் பெண்களுக்குப் பாதிப்பு என பெரும் பாதிப்புகளை அடைந்துவருகின்றனர். நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டே செல்வதால் விவசாயிகள் பயிர் செய்ய இயலாமல் அவதிப்படுகின்றனர்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகப் பேசுங்கள். இன்னொரு கேள்வி உங்களுக்கு இருக்கிறது.*

திரு. தி. வேல்முருகன்: *அரசு புறம்போக்கு நிலங்கள், சாலைகள், நீர்நிலைகள், நீர்வழிப் பாதைகள், மேய்ச்சல் நிலங்கள், உருக்கு ஆலைகள் உள்ளிட்டவை சிமெண்ட் ஆலைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஆதலால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்ப்பலியும் ஆகிறது. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்க உரையில் குறிப்பிட்டுள்ளதுபோன்று, தார்ப்பாய்கள் கட்டுகிறோம், வாகனங்களைத் தடை செய்கிறோம் என்று அரசுக்கு சொல்லிவிட்டு, அவர்கள் செய்கின்ற வேலையைச் செய்கின்றார்கள். ஆனால், விவசாயிகள் மற்றும் அப்பகுதி மக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். அது ஒரு தீவுபோன்று மாறி நிற்கின்றது. பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கும், வீட்டிற்கு ஒருவருக்கு வேலை வழங்குவதற்கும், உரிய இழப்பீடுகளை வழங்குவதற்கும் இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்*

[திரு. தங்கம் தென்னரசு] [2022 ஏப்ரல் 28

தலைமையிலே இருக்கக்கூடிய இந்த அரசு சூழலியலுடன் இயைந்திருக்கக்கூடிய தொழில் வளர்ச்சியை தன்னுடைய முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, அரியலூர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய தமிழ்நாடு சிமென்ட்ஸ் ஆலை உட்பட்டிருக்கக்கூடிய ஏறத்தாழ 5 அல்லது 6 ஆலைகளின் மூலமாக பழைய காலங்களிலே பெரிய அளவிலே மாசு ஏற்பட்டது உண்மை. ஆனாலுங்கூட, இப்போது அந்த ஆலைகளில் நவீன மாசுக் கட்டுப்பாட்டு கருவிகளைப் பொருத்தியதன் மூலமாக மாசின் அளவு பெருமளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனாலும் Mined area என்று சொல்லக்கூடிய, ஏற்கெனவே உபயோகப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சுரங்கங்கள் மற்றும் abandoned mines ஆக இருக்கக்கூடிய பகுதிகளை மீண்டும் சூழலியல் பூங்காக்களாக மாற்ற வேண்டுமென்ற கருத்தினை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். குறிப்பாக, எங்கள் மாவட்டத்திலே இருக்கக்கூடிய பந்தல்குடியிலே உள்ள Ramco Cement Factory–யிலே அப்படிப்பட்ட, ஏற்கெனவே சுரங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்டிருக்கக்கூடிய அந்தச் சுரங்கங்களை எல்லாம் அருமையான சூழலியல் பூங்காக்களாக மேம்படுத்தி, அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே திறந்து வைத்தார்கள். அதுபோன்ற காரியங்களை நாம் அங்கே செய்யலாம். Taurus வண்டிகள் போன்ற பெரிய வண்டிகள் வருகின்றபோது பாதிப்புகள் உண்டாகிறதென்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள்தான் அவை இயக்கப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம்.

இன்னொன்று, வேலைவாய்ப்புகளைப் பொறுத்தமட்டில், அந்த இடத்திலே இருக்கக்கூடிய மண்ணின் மைந்தர்கள், அந்த இடத்திலே இருக்கக்கூடிய நிலம் கொடுத்தவர்களுக்கென்று வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. இப்போதுகூட, ஆனந்தவாடி கிராமத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு வேலைவாய்ப்புகளை நானே வழங்கியிருக்கிறேன். எனவே, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. இந்த ஒட்டுமொத்த சூழலியலைப் பொறுத்தமட்டில், இப்போதிருக்கக்கூடிய சூழலியல் மேம்பாடுகள் தொடர்பாகவும் வரக்கூடிய காலங்களில் இதை மேம்பட்ட வகையில் செய்வதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்து வைத்திருக்கக்கூடிய கோரிக்கையை அரசு கவனத்திலே கொள்ளும்.

2022 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், சுருக்கமாகப் பேசுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கவன ஈர்ப்பு, கேள்விகள் ஊடாக நாங்கள் உங்களிடத்தில் வேண்டுதல் வைக்கின்றபோதே,— அங்கேயிருக்கக்கூடிய அத்தனை சிமென்ட் ஆலைகள் மற்றும் சுண்ணாம்புச் சுரங்கங்களினுடைய நிர்வாகப் பொறுப்பை ஓய்வுபெற்ற* IAS *அதிகாரிகள், ஓய்வுபெற்ற* IPS *அதிகாரிகள்,* DGP, IG, SP *ஆக இருக்கிறவர்களெல்லாம்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள், மக்களுக்காக, விவசாயிகளுக்காக, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காகப் போராடுகின்றபோது, அவர்கள் கொடுக்கின்ற தகவல்கள்தான் செய்திகளாக அரசுக்கு வருகின்றன; துறைச் செயலாளருக்கு வருகின்றன; மாண்புமிகு அமைச்சருக்கு வருகின்றன. ஆனால், அவர்கள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, உண்மையிலேயே பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுடைய வலிகளையோ, கஷ்டங்களையோ துன்பங்களையோ தங்களைப் போன்றவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களே பாதிக்கப்பட்ட அந்த நிலத்தைத் தந்த விவசாயிகளிடத்தில் ஒரு குறைதீர்க்கும் கூட்டம்போன்று ஒன்றை நடத்தி, அவர்களுடைய வலிகளை, அவர்களுடைய வேதனைகளை, அவர்களுடைய உயிரிழப்புகளை, பள்ளி, கல்லூரி* van *செல்கின்றபோது இந்த* Taurus Lorry *மோதி மாணவர்கள் கொத்து கொத்தாக இறந்து கொண்டிருக்கிறார்கள். போன வாரத்திலே 3 பேர் இறந்திருக்கிறார்கள். இந்த ஆலைகளுக்குப் பயன்படுத்துகின்ற வாகனங்களால் ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் 4, 5 பேர் இறக்கிறார்கள். ஆக, விவசாயிகள் அந்த அரியலூர் மாவட்டத்தில், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *இனி மக்கள் வாழ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரில் சென்றோ அல்லது ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற*

[திரு. தி. வேல்முருகன்] [*2022 ஏப்ரல் 28*

நீதிபதியைக் கொண்டு ஒரு விசாரணை ஆணையம் அமைத்தோ, இந்தக் குறைகளுக்கெல்லாம் நிவாரணம் ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தொழில் துறையில் மகத்தான சாதனை படைத்துவரும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எளிய மக்களின் வாழ்வுரிமைச் சிக்கல்களையும் கவனத்தில்கொள்ள வேண்டுமென்கின்ற வேண்டுகோளை முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கோரிக்கைகளை முழுமையாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் முடிந்தவுடன், ஒருநாள் நானே அங்கு வருகிறேன். நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் அங்கே வைத்துக்கொண்டு, அரியலூர் மாவட்டத்திற்கு நாங்களும் வந்து, நீங்கள் அங்கேயிருக்கக்கூடிய சூழ்நிலையில் உங்களையும் அழைத்து அவர்களிடத்திலே நாம் நிச்சயமாகப் பேசுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு முனைவர்* T.R.B. *ராஜா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது மற்றும் நான்காவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*